# மீகஹகிவுல பிரதேச சபை
# பதுளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 04 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 சனவரி 03 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூன் 27 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மீகஹகிவுல பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) முன்னைய ஆண்டின் இறுதியில் அறவிடவேண்டியதாகக் காணப்பட்ட முன்னைய ஆண்டின் கடன்பட்டோரின் கீழ் கணக்கு வைக்கப்படாத ரூபா 6,038,533 தொகையான மூலமன உதவி மீளாய்வாண்டில் கிடைக்கும் போது திரண்ட நிதியத்தில் செலவு வைப்பதற்குப் பதிலாக ஆண்டின் வரவுத் தலைப்பில் செலவு வைக்கப்பட்டமையினால் ஆண்டின் வருமானம் அப்பெறுமானத்தினால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காணப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையிடம் காணப்பட்ட ரூபா 1,485,459 தொகையான 03 கட்டிடங்களின் பெறுமதி மற்றும் 04 வாராந்த சந்தை நிலங்களின் பெறுமதி காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் கணக்கு வைக்கப்படாமையினால் அத்திகதியில் உள்ளவாறு காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி என்பன ரூபா 1,485,459 படி குறைத்து நிதிக்கூற்றுக்களில் காணப்பிக்கப்பட்டிருந்தது.

(இ) உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்காக மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய ரூபா 25,318 தொகை மற்றும் முன்னைய வருடங்களில் செலுத்த வேண்டிய ரூபா 699,279 தொகைக்காக கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையினால் ஆண்டின் செலவினம் ரூபா 25,318 இனால் குறைவாகவும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 724,597 இனால் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காணப்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2008 திசெம்பர் தொடக்கம் 2009 திசெம்பர் வரையான காலத்தில் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணமான ரூபா 776,954 தொகை 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வருமான கடன்பட்டோரின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

**(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2013 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் 15 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிராததுடன் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்களின் காலப்பகுப்பாய்வு கீழே காட்டப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 03 மாதம் தொடக்கம் 01 வருடம் வரை | - | 01 |
| 01 வருடம் தொடக்கம் 02 வருடம் வரை | - | 14 |
| | | 15 |

### (ஆ) கணக்காய்விற்குத் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 21,013,140 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 687,861 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 436,698 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 521 | 1,069 | 184 |
| (ii) | வாடகை | 1,634 | 1,461 | 349 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 459 | 347 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 17,346 | 23,926 | 6,892 |

### 2.2.2 வாடகை

சபைக்குச் சொந்தமான 02 கடைகளை வாடகைக்குப் பெற்ற வாடகையாளர்களினால் 30 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் வாடகை செலுத்தப்படாதிருந்ததுடன் அந்தக் கடைகளுக்கான 2012 திசெம்பர் 31 இல் காணப்பட்ட நிலுவை ரூபா 156,737 ஆகும்.

### 2.2.3 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 362,516 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 698,637 |

### 2.2.4 ஏனைய வருமானம்

(அ) சபையினால் முச்சக்கர வண்டி தரிப்பிடக் கட்டணம் அறவிடுவதற்கு உப விதிகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும் 02 முச்சக்கர வண்டித் தரிப்பிடங்களில் உள்ள 23 முச்சக்கர வண்டிகளிலிருந்து கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் நடமாடும் விற்பனை வாகனங்களில் இருந்து கட்டணத்தை அறவிடுவதற்கு உபவிதிகள் விதிக்கப்படாமையினால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

### 2.3 செயற்பாடற்ற மற்றும் குறைந்த பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

(அ) 2002 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியேற்பாட்டின் கீழ் ரூபா 529,000 தொகை செலவில் டொலமைட் உற்பத்தி செயற்திட்டதிற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் அந்தச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்பட்டமையினால் 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஏப்ரல் வரை செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) இராணுவத்தின் அவசர கடமைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டு 2010 ஒக்தோபர் 27 அந் திகதி மீளச் சபைக்குக் கையளிக்கப்பட்ட கப் வாகனம் ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத உடைந்த நிலையில் சபையின் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 2.4 ஒப்பந்த நிருவாகம்

2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தில் காணப்படுகின்ற ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்காமல் சனசமூக அமைப்புக்களுக்கு ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன.

## 2.5 செயற்பாட்டு செயற்திறனின்மை

(அ) உரிய செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் சபைக்குப் பெற்றுக் கொடுக்கும் அடிப்படையில் 2008 ஆம் ஆண்டில் குறித்தொதுக்க அடிப்படையிலான உதவியின் கீழ் மீகஹகிவுல ஜாதிக சவிய கமநெகும செயற்பாட்டு அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 301,600 பெறுமதியான சொத்துக்கள் அச் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் சபைக்கு பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 203 ஆம் விதியின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் ஆதனங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்